ரிஜிஸ்டர்ட் நெ 1378 | விலை பை 0-0-6

Dravidan

திராவிடன்

நாடோறும் வெளிவருவது

ஆசிரியர் திரு. சனக சங்கர கண்ணப்பர்

மலர்-14] சென்னை சுக்லஹு மார்கழிமீ 16உ 1929ஹு டிசம்பர்மீ 30உ திங்கட்கிழமை [இதழ் 218

இராமாயண ஆபாசம்
விலை அணா 4
'திராவிடன் பதிப்பகம்'
சென்னை.

விலை 0-12-0
சாமிகளின் அடிமைகள்
(தமிழ் மொழி பெயர்ப்பு)
'திராவிடன் பதிப்பகம்
சென்னை.

பப் (Pfaff) தையல் மிஷின்கள்

மிகவும் சிறந்தனவென்று சர்ட்டிபிக்கட் பெற்றது.
(1862ம் வருடம் ஸ்தாபிக்கப் பெற்றது.)
தனி சாமான்கள் எப்போதும் கிடைக்கும்.

ரொக்க பணத்துக்கும் தவணை முறையிலும் வாங்கலாம்.

சத்தமின்றி சுலபமாய் ஓடத்தக்கது. முன்னும் பின்னும் தைக்க வல்லது

மற்ற விபரங்களுக்கும், ஏஜெண்சி வேலைக்கும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுக:—
சோல்ஏஜெண்டுகள்:— பெல் அண்டு கோ., லிமிட்டெட்.,
பம்பாய்—சென்னை.
தந்தி விலாசம்:— "பப்"-பம்பாய் "ஸ-இமெஷின்" சென்னை.
கர்ணக்ரோட் 1/186 மவுண்ட்ரோட்.
(651 ஷி) பம்பாய் 2. சென்னை.

இந்தியன் பாங்கி லிமிடெட்

பிக்செட் டிபாசிட்டுகள் கீழ்க்கண்டமுறைப்படி இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும்.
ரூபா 100க்கும் அதற்கு மேற்பட்டுள்ள தொகைக்கும் ஒரு வருஷத்திற்கு 100-க்கு 4½ வீதம் வட்டி.
ரூபா 5000-த்திற்கு மேற்பட்டுள்ள தொகைக்கு இரண்டு வருஷத்திற்கு 100க்கு 5 வீதம் வட்டி.
(போர்டின் உத்திரவுப்படி.)
D. R. பாலாஜிராவ்,
(807 ஷி) செக்ரடரி.

சாம்பில் கியூரால் 6 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

இருபதாம் நூற்றாண்டில் வரப்பிரசாதம் பெற்ற

கியூரால்

குணத்தில் சிறந்தது கியூரால்
சகுணம் பரிமளம் பெற்றது கியூரால்
ஏழைகளும் தனவந்தரும் இச்சிக்கும் இனியதைது கியூரால்
கொடூரமான தலைவலி தீர்ப்பது கியூரால்.
மணத்தில் குணத்தது கியூரால்

எமது கியூரால் ஜலதோஷம், இருமல், பல்வலி, கை கால் வாதம், இடுப்புவலி, சில் வாய்வு, கட்டி, வீக்கம், சுளுக்கு, வயிற்றுவலி, மூல முதலிய இவைகளை சீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும். கியூரால் மருந்தை ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

ஏஜெண்டுகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

எமது கியூரால் எல்லா வியாபாரிகளிடமும், மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். இரங்கூன், பினாங்கு, சிங்கப்பூர், சிலோன், தென் ஆப்ரிக்கா முதலிய அயல்பிரதேசங்களிலும், இந்தியாவில் எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

எம். எஸ். ஜெயராம்,
781) தெற்கு வெளிவீதி, நெ. 5, ராமபிள்ளை சந்து, மதுரை.

கற்பகம்

ஓர் மாத உயர்தர காவல் சஞ்சிகை

இந்த சஞ்சிகையானது இந்த மார்கழி மாதமுதல் வெளி வந்துவிட்டது. 72 பக்கங்களையுடையது. 64 பக்கங்களில் நீண்ட கதையொன்றும் 8 பக்கங்களில் இன்பம் விநோதம் அடங்கிய பல விஷயங்களும் வெளிவரும். முதன் முதல் சௌந்தரவதனி அல்லது சிறந்த இராக்ஷிபன்கள் என்னும் கதை அற்புதமான பல விஷயங்களோடு வெளிவரும்.

மாதிரி பிரதிக்கு எழுதவும்:—
3 மாத சந்தா அணா 10
6 மாத சந்தா ரூ. 1
வருட சந்தா ரூ. 2
விலாசம்:—
கற்பகம் ஆபீஸ்,
5 வீராசாமி பிள்ளை வீதி,
808) சென்னை.

கர்ப்பாசய ரோக நிவாரணி

எம். கே. முருகேச முதலியார்
சேடிவ் டாக்டர், ரங்கூன்.

"சௌரியா"

தங்களின் சௌரியாவின் உபயோகத்தினால் அநேக பெண்மணிகள் ருதக வியாதியினின்றும் நிவர்த்திக்கப்பட்டதுடன் சந்தான பாக்யத்தையும் அடைந்திருக்கிறார்கள், தயவுசெய்து இன்னும் 6 புட்டிகள் அனுப்பக்கோருகின்றேன்.

ருதக ருஜை, ருதக வலி, அகால பதிவட்டு, ருது ஸ்ராவம், பதிவட்டை தடைபட்டுப்போவது, வெள்ளை ரத்த போக்கு, வயிற்றில் கட்டி, மூர்ச்சை, சந்தானமில்லாமை முதலிய சகல ரோகங்களும் இந்த சௌரியாவின் உபயோகத்தினால் சூரியனைக் கண்ட பனிபோல் நிவர்த்தியாகும்.

புட்டி 1-க்கு ரூபா 3 0—0.
பாக்கிங், தபால் சலவு வேறு.
ஏஜெண்டுகள் தேவை.

சங்கரராம் மெடிகல் ஹால், சேலம்
Telegrams:—"SOWRIYA" (310)

சலவைக்கும் ஸ்நானத்திற்கும்
லன்பினவர் சோப் ஸர்தார் சோப்
உபயோகியுங்கள்

தங்க மெடல்கள் ஸர்டிபிகேட் பத்திரங்கள் பரிசுபெற்றது.

சுத்தமான சோப்புகள் என்பதற்கு உத்தரவாதம் செய்யப்பெற்றது.

நாட்லி அன் பர்மண்டின் பிஸ்கட், ரோஸ் பிஸ்கட், ஜம், டேபிள், ஆரூட், மேரி, லைம், லெமன் ஜ-ஸ்பரி [illegible] ஓமம், பிஸ்கட் [illegible], கஸ்தூரி, ரோஸ் சர்பத், [illegible] சந்தனத்தைலம், ஜெய மெஜிக் வாசனை புகையிலை, யானைமார்க்கு சேமியா இவைகளை உபயோகியுங்கள், விலை சகாயமாய் எங்கும் கிடைக்கும்.

சேடிவ் டாக்டர் எஸ். [illegible] வைத்தியர் அவர்களால் தயாரித்த கஸ்தூரி மாத்திரை கோரோசனை மாத்திரைகள் 64 வகை ஜுர சம்ஹாரி, [illegible] இவைகள் சகாயமான விலைக்கு தரக்கூடும். எல்லா ஊர்களில் ஏஜெண்டுகள் தேவை. மொத்த வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கக்கூடும்.

தந்தி விலாசம்:— 'பிஸ்கட்' மதுரை. } வி. கே. அண்டு சன்ஸ்,
கீழ மாசி வீதி, மதுரை.

ஒரு மணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை

குணம் இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபா இனாமாகக் கொடுக்கப்படும்.

கோழியைப்போல் அதிசீக்கிரத்தில் ஸ்கலிதமாகும் புருஷர்கள் இந்தக் குளிகையில் ஒன்றை மாலை 6-மணிக்குச் சாப்பிட்டு இரவு பால் வெற்றிலை அருந்தி முயன்று பார்ப்பாராகில் பெருத்த சுகானந்தம் உண்டாகும். அநுபவித்துப் பார்ப்பவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10-நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், ரோஜா புஷ்பம் போன்ற முகதேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். கெட்டுப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம் செய்கிறோம். உடனே எழுதுங்கள்.

டப்பி 1-க்கு ரூபா 2 0 0
உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.
ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
(871இ) தபால் பெட்டி 119, மதராஸ்.

மாதம் 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பாதிக்கலாம்

கைத்தொழில் முறைகள்

(திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு)

இந்நூலின் முதற்பதிப்பு 2000 பிரதிகள் சில மாதங்களில் விற்றுப் போயின. இந்தியாவின் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சூரியனைக்கண்ட பனிபோல் போக்கக்கூடிய அரிய புஸ்தகம். சோப்புகள், மெழுகுவர்த்திகள், பிஸ்கத்துகள், இங்கிகள், ரிக்குச்சிகள், சகலவிதமான வாசனை சாமான்கள், மருந்துகள் இதுபோன்ற 1000 இரகசிய முறைகள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. பிறர் உதவியின்றி தாமே தொழில்செய்து சம்பாதிக்கத்தக்க அரிய போதனைகள் அடங்கிய இந்நூலுக்கு விலை மிகவும் சொற்பம் என்பதைக் கவனியுங்கள்.

800 பக்கங்களுள்ளது. ஈரோப்பியன் டிரேட் மார்க் உள்ளது. விலை ரூபா 1—8—0 தபால் செலவு அ. 5

(871-ஏ) லாலன் புஸ்தகசாலை, 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

அழகிய ஆப்டோன் படங்களடங்கியபுதிய நாவல்.

சுகந்தபுஷ்பம்.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது. "கற்பாசிக்கு அரசனும் துரும்பு" என்பதை திருபிக்கும் சுகந்தவல்லியின் கற்புப் பிரவாகமும். கணவனின் துர்க்குணத்தையும் சற்குணமாக்கும் கன்னிகையின் மாண்பும் மற்றைய ரஸபாவங்களும் நிறைந்தது. விலை ரூபாய் ஒன்று.

(908) வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை.

நம்பிக்கையான நகைகள் வாங்குவதற்கு இதுவே தகுந்த இடம்.

தி ஆல் இந்தியா ஜுவலரி கம்பெனி,

நகை வியாபாரிகள், நெ. 2, காரா ஜமுதலி தெரு சென்னை.

Late Clerks of Messrs Kota Muniratnam Chetty and Sons Madras. } Proprietors.
கே. ராமச்சந்திர அய்யர்.
வி. கே. சேஷாத்திரி அய்யங்கார்.

N. B.—வெளியூர் ஆர்டர்களும் ஏற்று கவனிக்கப்படும். (893)

லாகூர் காங்கிரசு

பண்டித ஜவகர்லால் நேருவின் பேருரை

வேற்றுமைக்குக் காரணம் சமூகக் கொடுமைகளே

“நான் தொழில் மத தத்துவத்தைச் சேர்ந்தவன்”

விஷயக் கமிட்டியினரின் ஒத்துழையாமை தீர்மானம்

லாகூர் காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவர் டிசம்பர் 29ந்தேதி பிற்பகல் இந்துஸ்தானியில் ஆற்றிய பேருரை:—

தோழர்களே!

நாற்பத்து நான்கு ஆண்டுகளாக இந்தேசிய காங்கிரசு இந்தியாவின் விடுதலைக்காக பாடுபட்டு வந்தது. அக்காலவரையில் இது நீண்ட உறக்கத்திலிருந்து மெல்லென உண்மையில் தேசிய உணர்ச்சியை உண்டுபண்ணி தேசிய இயக்கத்தை அமைத்தது. நமது வலுவதையும் பலஹீனத்தையும் உணர்ந்தும் எதிர்காலத்தை நம்பிக்கையுடனும் அச்சத்துடனும் நோக்கியும் நமது முடிவின் நெருக்கடியில் இன்று நாம் கூடியிருப்போமாறுள், நமக்கு முன்பு சென்றவர்களும் நம்மைப் பின்பற்றி நாம் விடுதலைப் பெற்று மகிழ்ச்சியடையட்டும் என்ற நோக்கத்தோடு பயனைச் சிறிதும் எதிர்பாராமல் தங்கள் வாழ்க்கையினை தியாகித்தவர்களுமானவர்களை முதன்முதலாக நினைத்தல் நலமாகும். முதிய பெரியார்களில் பலர் நம்முடன் இல்லை. பின்வந்தோராகிய நாம் அவர்கள் அமைத்த மேடையில் நின்று அவர்தம் முயற்சிகளை இழித்துக் கூறலாம்; அங்ஙனம் செய்தல் உலகத்தின் இயல்பு. அவர்களையாவது, இந்தியா விடுதலைபெற அவர்கள் அடிப்படையிட்டு ஆற்றிய பெரும் சேவையை யாவரும் ஒருவராலும் மறக்க முடியாது. என்ன விளையும் என்பதைப் பொருட்படுத்தாமல் அன்னியர் ஆதிக்கத்தை எதிர்த்து தமது வாலிபவாழ்க்கையினைத் தியாகித்தவரும் வருத்தத்திலும் இடுக்கணிலும் தங்கள் பெலவீனநிலையை சகித்தவருமான ஆடவரையும் மகளிரையும் நாம் ஒருபொழுதும் மறக்க முடியாது. அவர்களில் பலரின் பெயர்கள்கூட நமக்குத் தெரியாது. அவர்கள் பொதுஜன புகழ்ச்சியை எதிர்பாராமல் மௌனத்திலேயே பாடுபட்டு வருந்தினர்; தங்கள் இருதயத்திலுள்ள இரத்தத்தால் இந்திய சுதந்திரமென்னும் செடியைப் போஷித்து வந்தனர். நம்மவரில் பலர் வேறெங்கு எந்தவாறு நடந்தபோதும் சமாதானத்திற்குட்பட்ட போதும் அவர்கள் எழுந்து நின்று சுதந்திரமடைய ஜனங்கட்கு உரிமையுண்டென்பதை அறிவுறுத்தி இந்தியாவின் இழிந்த நிலைமையிலும் கொடுங்கோன்மைக்கும் அடிமை வாழ்விற்கும் இடங்கொடுக்க மறுப்பதால் இந்தியா வாழ்க்கை உயிரையுடையதென்பதை உலகினுக்கு விளம்பரஞ் செய்தனர். சிறுகச்சிறுக நமது தேசிய இயக்கம் அமைக்கப்பட்டது. தியாகம் செய்த நமது மக்களின் வீழ்ச்சியடைந்த பிரேதங்களின்மீது இந்தியா முன்னேறி வரு முதியபெரியார்கள் நம்முடனில்லை; ஆனால் அவர் தம் ஆண்மை இன்னும் நம்முடனிருக்கிறது; யதீந்தாஸ், விசயா (பர்மியர்) போன்ற தியாகிகளை இந்திய நாடு இன்னும் பெறக்கூடும்.

சிறப்பு பொருந்திய இவ்வியக்கத்தினையே நாம் உடைமையாகப் பெற்றோம்; எனது வசம் அதனை ஒப்படைக்க நீங்கள் விரும்புகின்றீர். பெருமை மிக்க இந்த பதவியை யான் வகிப்பது தற்செயலாகவென்பதை யான் நன்கு அறிவேன்; நீங்கள் நினைத்ததோ வேறு. நம்மில் மிகப் பெரியாரான ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதே உங்கள் விருப்பம். அதனினும் அறிவுடைய தேர்வு வேறில்லை. ஆனால் அப்பெரியாரும் சதி சூழ்ந்து உங்கள் விழைவிற்கும் எனது விழைவிற்கும் விரோதமாக என் வசம் பொறுப்பாகிய இக்கோடும் தள்ளப்பட்டது. இரண்டும் கெட்ட இந்நிலைமையில் என்னை வைத்ததற்கு யான் உங்கட்கு நன்றி செலுத்தட்டுமோ? ஆனால் தன்னம்பிக்கை இல்லாத ஒருவனிடம் நீங்கள் நம்பிக்கை வைத்ததற்கு யான் நன்றியறிதலுடையவனு விருக்கிறேன்.

சுதந்திரக் கிளர்ச்சியின் தீவிரம்

இப்போது ஏற்பட்டிருக்கும் தீவிர தேசிய விஷயங்களை நீங்கள் ஆலோசனை செய்வீர்கள்; உங்கள் தீர்மானங்கள் இந்நில வரலாற்றின் போக்கையே மாற்றக்கூடும். ஆலோசனை செய்யத்தக்க விஷயங்கள், உங்கட்குமட்டு மிருக்கவில்லை. முழுவுலகமே சிந்தனை செய்தற்கு உரிய ஒரு பெரும் விஷயமாக விருக்கிறது. ஒவ்வொரு மக்களும் தாழ்ந்த

[illegible]

நிலைமை ஏற்படும்போதும், நாம் சரித்திர இறுதி காலத்திலுள்ளோம்.

எதிர்காலம் எதனைக் கொணருமென்று எவராலும் கூறமுடியாது; ஆனால் எதிர்கால உலகநோக்கத்தில், ஆசியா கண்டம், இந்தியாகூட, தீர்மானிக்கும்படியான ஒருபகுதியை மேற்கொள்ளுமென்பதாக நாம் உறுதி கூற முடியும். ஐரோப்பியர் ஆதிக்கத்தின் குறுகிய நான் நெருங்கி வருகிறது. நடவடிக்கைக்கும் வைக்கத்திற்கும் நடுநிலையாக ஐரோப்பா இருப்பதினின்றும் நின்று விட்டது. எதிர்காலம் அமெரிக்காவசமும் ஆசியாவசமும் உள்ளது. வரலாறு பொய்யாகவும் பூரணமற்றதாகவும் இருப்பதனால், முழு உலகத்தின் மீது ஐரோப்பா எப்பொழுதும் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கிறதென்பதாக நினைக்கின்றோம். ஆசியா மேனாட்டுப்படைகளை, அவை ஆசாரஞ் செய்யட்டுமென்று விட்டு மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்துள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, ஆசியாவின் படைகள் ஐரோப்பிய படைகளைச் சிதைத்ததென்பதை நாம் மறந்து விட்டோம். நவீன ஐரோப்பாவிலிருப்பவரில் பெரும்பான்மையோர் ஆசியாவிலிருந்து படை எடுத்துச் சென்றவர்களின் வழிவந்தவராவர். அலெக்சாண்டரின் இராணுவ அதிகாரத்தை முடிவாக இந்தியாவே சிதைத்ததென்பதையும் நாம் மறந்து விட்டோம். சிந்தனையில், ஐயமின்றி, ஆசியாவிற்குமே சிறப்பாக இந்தியாவிற்குமே தலைமைப்பும் உரியது. செயலிலும் ஆசியா சிந்தனைக்குச் சமமாக பெருமை தாங்கியதே. இனி ஆசியாவின் படைகளோ அல்லது ஐரோப்பாவின் படைகளோ கண்டங்களின் மீது படையெடுத்து சிதைக்க யாம் ஒருவரும் விரும்பவில்லை அத்தகைய நிகழ்ச்சிகள் முன்னர் ஏற்பட்டதே போதுமானதாகும்.

இந்தியா வேறு; உலகம் வேறல்ல.

இந்தியா இன்று உலக இயக்கத்தின் ஒரு பகுதியாகும். சீனா, துருக்கி, பாரசீகம், எகிப்து, மட்டுமின்றி, ருஷியாவும்கூட அத்தகையதே. அவ்வியக்கத்தில் மேனாடுகள் ஈடுபட்டு வருகின்றன. இந்தியா அதனில் கலவாது தனித்திருக்க முடியாது; கஷ்டமானதும் சிக்கலானதுமான சொந்த காரியங்கள் நமக்கு உள்ளன. அவைகளைத் தவிர்த்து, ஒரு உலகத்தைப்பாதனை செய்யும் பெரியவிஷயங்களில் ஈடுபட்டு மறைந்து கொள்ளவும் நம்மால் முடியாது. ஆனால் உலகத்தை அறிந்து கொள்வதைத் தவிர்ப்போமானாலும் நமக்கு கஷ்டம் நேரிடும். இன்றைய நாகரீகம் ஒருவகை மக்களோ அல்லது ஒரு நாட்டினரோ ஆதிக்கம் கொள்வதன்று. அது கலப்பான கட்டிடமாகும்; எல்லா நாடுகளும் கலந்து ஈடுபட்டதாகும்; பின்பு தத்தம் சிறப்பான இயல்புகட்கு ஏற்றவாறு நாடுகள் யாவும் மேற்கொண்டதாகும். உலகினுக்கு அறிவுறுத்த இந்தியா ஒரு செய்தியினை உடையதாயின், உடையதாக யான் எண்ணுகின்றேன், இதரமக்களின் செய்திகளை நம்மாடு ஏற்றுப்பெற்று பெரிதும் அவைகளிடமிருந்து அறிந்து கொள்ளவேண்டும்.

இந்தியாவின் தாழ்மைக்குக்காரணம் சமூகக் கொடுமைகளே

ஒவ்வொன்றும் மாறுதல் அடைந்து வருபோது, இந்திய வரலாற்றின் நீண்ட போக்கை நினைக்கவேண்டுவது நலமானதாகும். இந்தியாவின் சமுதாய அமைப்பின் நிலைகுலையாத்தன்மை சரித்திரத்தில் வியக்கத்தக்க நிகழ்வாக விருக்கிறது. அது பலவித அன்னியர் செல்வாக்கையும் ஆயிரக்கணக்கான ஆண்டு மாறுதலையும் சச்சரவையும் எதிர்த்து நின்றது. அங்ஙனம் நின்றதற்குக்காரணம் அது அவைகளை உட்கொள்ளவும் சகிக்கவும் முயன்றதே. அதன் நோக்கம் வெளித்தள்ளவேண்டுமென்பதல்ல; ஆனால் பலதரப்பட்ட நாகரீகங்கட்குள் சமநிலை ஏற்படுத்த வேண்டுமென்பதே. ஆரியர்களும் ஆரியரல்லாதவர்களும் ஒருவரின் உரிமையை மற்றவர் அங்கீகரித்து, ஒருங்கே வாழ்ந்தனர். பாரசீகர்களைப் போன்ற வெளிநாட்டவரும் வரவேற்பு அளிக்கப்பட்டு சமுதாயத்தில் ஒரு இடத்தைக்கொண்டனர். முஸ்லிம்களின் வருகையோடு சமநிலை கலைக்கப்பட்டது ஆனால் இந்தியா சமநிலை ஏற்படுத்த முயன்று பெரும்பான்மையாக சித்தி பெற்றது நாம் நமது வேற்றுமைகளை ஒழுங்கு படுத்தும் முன்பு துரதிஷ்டமாக பிரிட்டிஷ் மக்கள் வந்தனர்; நாம் வீழ்ச்சியடைந்தோம். நிலைத்த சமுதாயத்தை ஏற்படுத்துவதில் இந்தியா பெரிதும் சித்திகரமானபோது, அது மிக்க சிறப்பான விஷயமொன்றில் தவறியது. அதனைத் தவறியதனால், நாடு வீழ்ச்சியடைந்து, அவ்வண்ணமே கிடக்கிறது. அதாவது சமத்துவம் என்னும் விஷயத்திற்கு ஒருவித ஒழுங்கும் ஏற்படவில்லை. இந்தியா அதனைப் பெரிதும் தவிர்த்து. சமத்துவமின்றி தனது சமுதாய அமைப்பை நிறுவியது. அந்நோக்கத்தின் கோரமான விளைவுகளை நாம் கோடிக்கணக்கான மக்களிடையே காண்கின்றோம். சேற்றுவரையிலும் அம்மக்கள் ஆழ்ந்தப்பட்டு, வளர்ச்சிக்கு ஒருவித வசதியுமின்றி யிருக்கின்றனர்.

அக்காலமிருந்த போதிலும், ஐரோப்பா போர்களில் ஈடுபட்டிருந்தபோதும் கிறிஸ்துவர்கள் தங்கள் இரட்சகரின் பெயரால் ஒருவரை ஒருவர் படுகொலை செய்தபோதும், இந்தியா சகிப்புத்தன்மை கொண்டிருந்தது. அந்தோ? இன்று அச்சகிப்புத்தன்மைசிறிதுமில்லையே. மத சுதந்திரத்தைச் சிறிது பெற்று ஐரோப்பிய நாடு அரசியல் சுதந்திரத்தையும் அரசியல் சமத்துவத்தையும் சட்ட நீதிக்கு ஒத்த சமத்துவத்தையும் நாடி முயன்றது. இன்று அரசியல் பெரிதும் பொருளுடையதாக விருக்கவில்லை; மிக்க தீவிரமான விஷயம் சமுதாய பொருளாதார சமத்துவமாக விருக்கிறது.

இந்தியாவும் அவ்விஷயத்தில் ஒரு முடிவு காணவேண்டி விருக்கிறது. அங்ஙனம் செய்யும் வரையில் நமது நாட்டின் அரசியல் சமுதாய அமைப்பு நிலைத்திருக்க முடியாது. எந்த நாட்டினையாவது பின்பற்றி நாம் அவ்விஷயத்தில் முடிவு காணவேண்டுமென்ற அவசியமில்லை. அம்முடிவு நிலைபெற்றிருக்க வேண்டுமானால், அது நாட்டு மக்களின் மதி நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்; இந்தியாவின் சிந்தனை, கல்வி நாகரீகம் ஆகியவற்றின் விளைவாக விருக்க வேண்டும். அம்முடிவு ஏற்படுமானால் நம்மை சஞ்சலப்படுத்துவதும் நமது சுதந்தரத்திற்குத் தடையாக விருப்பதுமான பல வகுப்புகட்கு இடையே நிலவும் மகிழ்ச்சியற்ற வேற்றுமைகள் தானாகவே மறையும்.

அச்சமும் அவநம்பிக்கையும்

உண்மையான வேற்றுமைகள் பெரும்பான்மையாக மறைந்துவிட்டன. ஒருவர்மீது ஒருவருக்கு அச்சமும் அவநம்பிக்கையும் சந்தேகமும் மிகுந்து நிற்கின்றன. அவைகளால் ஒற்றுமைக்குலைவு ஏற்படுகிறது. நம்முன்னிருக்கும் விஷயம் வேற்றுமைகளை நிவர்த்தி செய்வதன்று. அவை உடனிருந்து நமது பலதரப்பட்ட நாகரீகத்தைச் செழிப்புறச் செய்யலாம். அச்சத்தையும் சந்தேகத்தையும் எங்ஙனம் நிவர்த்தி செய்வதென்பதே நமக்கிருக்கும் கேள்வி. தெளிவாகப் புலனாகவில்லையாதலினால், அவைகளைத் தெளிவது அருமையாக விருக்கிறது. கடந்த ஆண்டு சர்வ கட்சி கமிட்டியால் அங்ஙனம் செய்ய முயற்சி ஒன்று செய்யப்பட்டது. முடிவை நோக்கி பெரிதும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சித்தியடைந்தது முயற்சிகட்கு எற்றவாறில்லை யென்பதை வருத்தத்துடன் ஒத்துக்கொள்ள வேண்டியவர்களாகவிருக்கின்றோம். முஸ்லிம், சீக்கிய நண்பர்களில் பலர் உத்தேசிக்கப்பட்ட முடிவுகளைத் தீவிரமாக எதிர்த்தனர். வன்மையையும் நூற்றுக்கு இவ்வளவு விழுக்காடென்பதையும் குறித்து, சிற்றம் ஏற்பட்டது அச்சத்தையும் அவநம்பிக்கையையும் போராடுதற்கு தர்க்கமும் பகுத்தறிவும் தக்க ஆயுதங்களாகா நம்பிக்கையும் வள்ளன்மையுமே அவைகளை ஒழிக்கக்கூடும். பல வகுப்புத் தலைவர்களும் இந்நம்பிக்கையையும் வள்ளன்மையையும் பெரிதும் உடையராக விருப்பரென்று யான் விழைகின்றேன். நாமனைவரும் ஒரு அடிமை நாட்டில் அடிமைகளாக விருப்போமானால், நமக்கோ அல்லது ஏதாவது வகுப்பினுக்கோ எதனை லாபமாகப் பெறக்கூடும்? இந்தியாவிலிருந்து அடிமை வாழ்வை நீக்கி மீண்டும் சுதந்திரக் காற்றை உட்கொள்வோமானால், நாம் எதனை இழக்கக்கூடும்? சுதந்திரத்திற்கு உரிமையையே அன்னிய நாட்டினர் மறுக்கும்போது, நம்மவரல்லாதவரும் நம்மை அடிமையில் வைத்திருப்பவருமான அன்னியர்களையா நமது சிறு உரிமைகட்கும் நன்மைகட்கும் பாதுகாப்பாளராக விருக்க விரும்புகின்றீர்? உறுதிகொண்ட சிறுபான்மையோரை பெரும்பான்மையோர் ஒருபொழுதும் அழிக்க முடியாது சட்டசபையில் சிறிது அதிக இடங்கள் அளிப்பதால், எந்த சிறுபான்மையோரும் பேரதிய அளவில் பாதுகாக்கப்படமாட்டார்கள். இதுபோது உலகத்தில் எங்கு பார்த்தாலும் ஒருசிலச் சிறுபான்மையோர் மிக்க பெரும்பான்மையோர்மீது செல்வத்தையும் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் கொண்டுள்ளனரென்பதை நாம் நினைக்கவேண்டும்.

மதத்தில் ஆவேசத்திற்காவது குறுகிய நம்பிக்கைக்காவது எனக்கு விருப்பம் இடையாது; அவை சிதைந்துவருவதைக்கண்டு யான் மகிழ்ச்சியடைகின்றேன். வகுப்புவாதத்தையும் யான் எவ்வகையிலும் விரும்பவில்லை. வகுப்பின் மதத் தொகுதியினரின் எண்களை அரசியல் உரிமைகளாவது பொருளாதார உரிமைகளாவது பொறுத்திருக்க வேண்டுமென்னும் வாதத்தை என்னால் பாராட்ட முடியவில்லை மதத்திலும் கல்வி அறிவு ஒழுக்கத்திலும் உரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதை யான் பூரணமாக தெளிகின்றேன். இவ்வுரிமைகளை எப்பொழுதும் அங்கீகரித்து அனுமதித்து வந்த இந்தியாவில் சிறப்பாக அவைதொடர்ச்சியாக காக்கப்படுதல் கஷ்டமானதன்று. இன்று நமக்குத் தடையாகவுள்ள அச்சத்தையும் அவநம்பிக்கையையும் வேரோடு களைய நாம் வழிகண்டு பிடித்தல்வேண்டும். அடிமை நாட்டினரின் அரசியல் பெரும்பான்மையும் அச்சத்தையும் அவநம்பிக்கையையுமே அடிப்படையாகக் கொண்டது எளிதில் விடுதலை பெறுவது சாத்தியமாகாத வகையில் நாம் நீண்டகாலம் அடிமையிலிருந்தோம்.

“நான் இந்துவா என்பது எனக்குச் சந்தேகம்”

யான் பிறப்பில் ஒரு இந்து; யான் அங்ஙனம் அழைத்துக் கொள்வதோ அல்லது இந்துக்களின் சார்பாகப் பேசுவதோ எவ்வகையில் சரியானதென்பதே எனக்குத் தெரியாது. இந்நாட்டில் பிறப்பு இன்னும் பொருட்படுத்தப்படுகிறது. அப்பிறப்பென்னும் உரிமையில் இந்துத் தலைவர்களுக்கு, அவர்களே பெரும்போக்காய் நடந்து கொள்ள முன்பட வேண்டுமென்று ஆர்வத்துடன் அறிவுறுத்துகின்றேன். இது கல்வொழுக்கமாவதோடு மின்னாமல் செம்மையானதும்பொருத்தமானதுமான செயலாகும். விடுதலைபெற்ற இந்தியாவில் இந்துக்கள் அதிகாரமற்றவராக விருப்பரென்பதை என்னால் யூகிக்கவே முடியவில்லை. என்னைப்பொறுத்தளவில் முஸ்லிம் சீக்கிய நண்பர்களையான் கேட்பதென்னவென்றால் அவர்கள் எதிர்ப்பின்றியும் வற்புறுத்தலின்றியும் தாங்கள் விரும்புவதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதே. பட்டங்களும் பெயர்களும் பொருட்படுத்த முடியாததும் நமது போராட்டங்கள் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொள்வதுமான காலம் நெருங்கி விட்டதென்பதை யான் அறிவேன். இதன்மூலமே நமது எதிர்காலமுன்னேற்றத்திற்குத் தடைகளாகவில்லாதவாறு நமது பரம்பரை ஏற்பாடுகள் என்னவாக விருந்தபோதிலும் கவலையில்லை.

சென்ற காங்கிரசு முடிவிற்கு அரசாங்கப் பதில்

சர்வ கட்சி அறிக்கையை அப்புறம் தள்ள வேண்டிய காலமும் நாம் தடைப்படாமல் நமது லட்சியத்தை நோக்கி முன் செல்லவேண்டிய காலமும் வந்துவிட்டது. கடந்த வருட காங்கிரசு அகில கட்சித் திட்டத்தை ஏற்க ஒரு வருடத்தை நிச்சயித்தது உங்கட்கு நினைவிலிருக்கும். அவ்வாண்டு கூடியவரையில் கழிந்துவிட்டது. அத்தீர்மானத்தின்படி இக்காங்கிரசு சுயேச்சையை ஆதரித்து விளம்பரஞ் செய்து அதனைப்பெற முறைகளை தீர்மானிப்பதாகும்.

அரசாங்கம் குடியேற்ற நாட்டுப் பதவியையாவது சர்வ கட்சி அரசாங்க அமைப்பையாவது கொணரவில்லை. அதற்குப் பதிலாக கொடுமையினையும் நமது தேசிய தொழிலாளர் இயக்கங்களின் அடக்குமுறைகளையும் கொணர்ந்தது. இவ்வன்னியர் அதிகாரத்தால் நமது தோழர்கள் எத்தனை பேர் நம்மிடமிருந்து பலவந்தமாக அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றனர்? எத்தனை பேர்கள் நாடு கடத்தப்பட்டு வருந்துவதோடு தங்கள் தாய்நாட்டிற்கு வர அனுமதியும் மறுக்கப்பட்டிருக்கின்றனர்? இராணுவப் படை நமது நாட்டினைக் கொடுமையாக அடக்கி வருகிறது; நம்மவரில் சிறந்தோர் தலைதாக்குவாரனேயானால், வஜ்ஜிரனி சவுக்கு உடனே மேல்தாக்குகிறது. கல்கத்தா தீர்மானத்திற்குப் பதில் அளிக்கப்பட்டது வெளிப்படையாகவும் திட்டமாகவுமிருக்கிறது.

[illegible] யேசைச மகாநாடு

சமாதானத்திற்கு வருவதாக சிறிது காலத்திற்கு முன்பு காணப்பட்டது. அரசப்பிரதிநிதி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக இந்தியாவின் எதிர்கால அரசாங்க அமைப்பைப்பற்றி அரசாங்கத்தலைமைநாட்டில் கலக்க இந்தியத்தலைவர்கள் அழைக்கப்படுவரென்று அறிவித்தனர். அரசப்பிரதிநிதி நன்மையையே கருதினர். அவரது மொழியின்போக்கு சமாதானப் பான்மையைக் காட்டியது. ஒரு அரசப்பிரதிநிதியின் நல்லெண்ணமும் மரியாதையான தொடர்மொழிகளும், நம்மை இழிவுபடுத்தும் கஷ்டமான உண்மைகட்கு ஒப்புரவு ஆகா பிரிட்டிஷ்ராஜதந்திரத்தின் சூழ்ச்சியான போக்கைப்பற்றியும்,நமக்குப்போதிய அநுபவம் உண்டு. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அழைப்பு அருத்த மற்றது. வாக்குறுதி எதுவும் அளிக்கப்படவில்லை. அவ்வழைப்பை நமது மூத்தால் மிக்கேமத்துடன் கல்கத்தா தீர்மானத்திற்கு ஒருவகையில் பதில் என்பதாக பொருள்கொள்ளலாம். அரசப்பிரதிநிதி விளம்பரத்தைப் பலவித அரசியல் கட்சிகளின் தலைவர் கூடி ஆலோசனைசெய்தனர். அவ்வறிக்கைக்கு அவர்கள் மிக்க ஆதரவான பொருள் கொடுத்து, சமாதானத்தை விரும்பியதால் பாதிவழியும் தாமாகவே சென்றனர். ஆனால் அதனை ஏற்றுக்கொள்ள நியந்தனைகள் என்ன வென்பதை மரியாதையான மொழியில் விளக்கமாக எடுத்துக்காட்டினர். சுயேச்சையில் நம்பிக்கையுடையவரும் அவ்வழைப்பு நமது ஒற்றுமையைக் குலைப்பதற்கு ஒரு தந்திரமென்று நன்கு உணர்ந்தவருமான பலர் மனக்கவலையும் ஐயமும் கொண்டோம். வெளியினின்றும் கொணரும் சமாதானத்திற்கு வசதி விருக்கும்போது, பலர் வருந்த வேண்டிய வரும் அவசியமான பயங்களையுடைய கொடும் தேசியப் போராட்டத்தை நாம் துரிதப்படுத்தல் நீதியாகுமா? எங்கள் இருதயத்தை நன்கு ஆராய்ந்து நாம் அறிக்கையில் கையொப்பமிட்டோம்; நாம் செய்தது ஒழுங்கானதா அல்லது தவறானதாவென்பது இன்றும் எனக்குத் தெரியவில்லை. பின்னர் விளக்கமும் காரணங்களும் வியாக்கியானங்களும் பிரிட்டிஷ் பாலிமெண்டிலும் மற்ற விடத்திலிருந்தும் வெளியாயின. ஐயப்பாடு முற்றும் நீங்கிற்று. அவ்வழைப்பின் உண்மைக்கருத்தும் வெளியாயிற்று. உங்கள் காரியக் கமிட்டியும் கூட சமாதானத்திற்கு கதவைத் திறந்துவைத்த, முடிவான தீர்ப்பைச் சகலசிரமித்து விட்டது.

அருசாஜெயில் குடியேற்றப் பதவி

கடந்த சில நாட்களில் இவ்விஷயத்தைப்பற்றி மற்றொரு விவாதம் ஏற்பட்டது. இந்திய அரசாங்க மந்திரி இந்தியாவைக் குறித்து தவல் உண்மை உணர்ச்சியைப் பிரிட்டிஷ் அரசாங்கம் சொந்தனோடல்லாமல் நடவடிக்கையிலும் நிரூபிக்க முயலுதலை எடுத்துக்காட்ட முயற்சி எடுத்துக்கொண்டனர். இந்தியாவிற்கு எதாவது செய்யவேண்டுமென்ற திரு. வெட்ஜ் உட்பென்னின் விழைவையும், இந்திய மக்களின் நல்லெண்ணத்தைப் பெற அவரது கவலையையும் நாம் அங்கீகரிக்கவேண்டும். அவரது பேச்சும் இராபேச்சனும் அதற்குமேல் ஒன்றையும் அறிவுறுத்தவில்லை. ‘நடவடிக்கையில் குடியேற்ற நாட்டுப்பதவி’ என்பதைப்பற்றி அவரெடுத்துக்காட்டியனுர். அது நமக்கு ஒரு சுருக்கமாக விருந்ததோடு, இந்தியாவைக் கொள்ளையடிப்பதைப்பற்றிச்சிறிதும் குறிக்கவில்லை. ‘நடவடிக்கையில் குடியேற்ற நாட்டுப்பதவி’ யாதும் பத்துவருட அரசாங்க நிருபத்தாதாலும் இந்திய மக்களின் பொறுப்புகள் இன்று மிகவும் பெரிதாக விருக்கின்றன. நாம் கேட்பது வைசராயின் தலைமையும், சர்வதேச சங்கத்தில் பிரதிநிதிகளும், சாமான்கள் வாங்குவதும், இந்திய கவர்னர்களும், பெரிய உத்தியோகங்களும் அன்று. ஏழை இந்தியர்களைக் கொள்ளையடிப்பதை நிறுத்தவும், உத்தியோகங்கள் மட்டுமல்லாது உண்மை அதிகாரத்தைப் பெறவும் நாம் விரும்புகின்றோம்

திரு. வெட்ஜ் உட்பென் கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவுக்களித்த உரிமைகளைப் பற்றி அறிவித்தனர். அவர் பஞ்சாபின் இராணுவ அமுல் ஏற்படுத்தியதையும், ஜாலியன் வாலாபாக் படுகொலையையும் ‘நடவடிக்கையில் குடியேற்றப் பதவி’ என்ற காலத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்த அடக்குமுறையைப்பற்றியும், கொள்ளையடிப்பைப்பற்றியுமறிந்திருக்கக்கூடும். நமக்கு இவர்கள் இனி அளிக்கக் கருதியுள்ள குடியேற்ற நாட்டுப் பதவி என்னவாயிருக்குமென்பதைப் பற்றி அவர் சிறிது வரிசை கூறி அளித்துள்ளனர். அதாவது சில இந்தியர்கட்கு அதிகாரத்தின் நிழலை அளித்து [illegible] மக்களை

மென்மேலும் அடக்குமுறை செய்வதும் கொள்ளையடிப்பதும் ஆகும்.

நாம் ஒத்துழைப்பதெப்படி?

இக்காங்கிரசு என்ன செய்யப்போகிறது? ஒத்துழைப்பிற்கு நிபந்தனைகள் நிறைவேற்றப்படாமலிருக்கின்றன. உண்மை சுதந்திரம் வருமென்பதற்கு உறுதி இல்லாத வரையில் நம்மால் ஒத்துழைக்க முடியுமா? நமது தோழர்கள் சிறைகளில் கிடக்கும்போதும் அடக்குமுறை நிலைபெற்று வரும்போதும் நம்மால் ஒத்துழைக்க முடியுமா? உண்மையான சமாதானம் விழையப்படுகிறதென்றும் தந்திரம் செய்யவல்லவென்றும் நமக்கு உறுதி அளிக்கப்படும் வரையில் நாம் ஒத்துழைக்கக் கூடுமா? [illegible] முறையில் சமாதானம்வராமுடியாது நாம் அன்னியர் ஆதிக்கத்தின் கீழேயே இருக்க வேண்டுமானாலும், நாம் அதற்கு இணங்காமலாவது இருத்தல் வேண்டும்.

கல்கத்தா காங்கிரசின்படி நமக்கு சுயேச்சையென்னும் ஒரேலட்சியமுள்ளது சுயேச்சையென்பது மற்றவைகளை விலக்கி தனித்திருப்பதென்று பொருள்படுதலால், இன்று சுயேச்சை யென்று கூறுவது சந்தோஷத்தை விளைவிக்கத்தக்கதல்ல. நாகரிகம் குறுகிய தேசியம் அன்று விரிந்தகூட்டுறவையும் ஒன்றினையொன்று அனுசரிக்கும் தன்மையையும் விளையும்படி [illegible] மேலும் நாம்சுயேச்சை என்னும் சொல்லை உபயோகிப்போமானால், நமது கொள்கைக்குப் பகைமையாக அவ்வளவாக கையாளவில்லை நமக்குசுயேச்சையென்பதன் பொருள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தினின்றும் ஏகாதிபத்தியத்தினின்றும் பூரண சுயேச்சை பெறுவதென்பதாகும். நமது சுதந்திரத்தைப் பெற்ற பிறகு, இந்தியா உலககூட்டுறவையும் ஐக்கியத்தையும்கொணர, செய்யப்படும் முயற்சிகள் யாவையையும் வரவேற்று, பெரும் தொகுதியில் சமத்துவம் பெற சொந்த தனது சுயேச்சையின் ஒருபாகத்தை இழக்கவும்கூட இசையுமென்று யான் நம்புகின்றேன்.

பிரிட்டிஷ் சாம்ராச்சியம் அத்தகைய தொகுதி அன்று. கோடிக்கணக்கான மக்களின்மீது ஆதிக்கம் கொண்டும் உலகத்தின் அதிகபாகத்தை அம்மக்களின் விருப்பத்திற்கு விரோதமாக ஆட்சி புரிந்தும்வரும்வரையில் அத்தகைய உயர்தரத் தொகுதியாக விருக்கவும் முடியாது. ஏகாதிபத்யமே அதன் அடிப்படையாகவும், இதரநாட்டினரைக் கொள்ளையடிப்பதே அதன் போதனைக்குஉரிய பிரதான முறையாகவும் இருக்கும்வரை பிரிட்டிஷ் சாம்பிராச்சியம் உண்மை குடியாட்சியாக விருக்க முடியாது. பிரிட்டிஷ்சாம்பிராச்சியத்தில் இன்று அரசியல் வீழ்ச்சி சிறுகச் சிறுக ஏற்பட்டுவருகிறது. அது ஆட்டம் கண்டுவிட்டது. தென்னாப்பிரிக்கா யூனியன் சாம்பிராச்சியத்தின்மகிழ்ச்சி கொண்ட பங்காளராகக் கூறமுடியாது. அயர்லாந்து அரசாங்கம் மனமுவந்திருப்பதாகத் தெரியவில்லை, எகிப்து விலகிக்கொண்டே வருகிறது. ஏகாதிபத்யமும் அதன் நுணுக்கமும் விசிறியெறியப்பட்டாலொழிய, குடியாட்சி(காமன்வெல்த்)யில் ஒரு சமத்துவ அங்கத்தினராக விருக்க கோராது. இது ஏற்படாதவரையில்சாம்பிராச்சியத்தில் இந்தியாவின் நிலைமை ஒரு உபகருவியாகவிருக்கும். கொள்ளையடிக்கப்படுவது இல்லாது பிரிட்டிஷ் சாம்பிராச்சியத்தை அணைத்து நிற்பது அபாயகர மானது. அவ்வணைப்பு அன்புடையதன்று. அங்ஙனமிருக்கவு மாட்டாது. அங்ஙனமிருக்கும்போது, கடந்த காலத்தில் ஏற்பட்ட தென்னை? மரணத்தின் முத்தமே.

உலக சமாதானம்

உலக சமாதானத்திற்குப் பேசப்பட்டு வருகிறது. உலகத்திலுள்ள நாடுகள் உடன்படிக்கைகள் ஏற்படுத்தியுள்ளன. ஆனால் இவ்வுடன்படிக்கைகளைப் பொருட்படுத்தாது, ஆயுதங்கள் வளர்ந்து கொண்டேவருகின்றன. சமாதான தேவதைக்கு அழகிய மொழியால் மட்டுமே மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது. போருக்குரிய காரணங்கள் நீக்கப்பட்டபோதே சமாதானம் ஏற்படும். ஒருநாட்டின்மீது மற்றொருநாடு ஆதிக்கம் கொண்டும் ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரைக் கொள்ளையடித்தும்வரும்வரையில், நிலைத்திருக்கும் ஒழுங்கைக்குலைக்க முயற்சிகள் செய்யப்பட்டே வரும்; நிலைத்த எந்த சமத்துவநிலையும் நீடிக்க முடியாது. ஏகாதிபத்தியத்தாலும் கொள்ளையடிப்பதாலும் சமாதானம் எப்பொழுதுமே வாராது. இவைகட்காக பிரிட்டிஷ் சாம்பிராச்யம் நிற்பதாலும் பாமரமக்களைக் கொள்ளையடிப்பதை அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும் நாம் மனமுவந்திருக்க முடியாது நமது பாமரமக்களின் மீதுள்ள கொடும் பாரங்களை நீக்க உதவாவிட்டால் எது வந்தபோதிலும் பயனில்லை. பெரியசாம்பிராச்சியத்தின் பாரம் [illegible] செல்வதனுவாக விருக்கிறது நீண்டகாலம் நமது மக்கள் அதனைத் தாங்கினர். அவர்தம் முதுகு வளைந்து விட்டது. உணர்ச்சியும் குன்றியது மேலும் கொள்ளையடிக்கப்பட்டு வந்தால், எங்ஙனம்இந்தியர் ஆங்கில சமசாம்பிராச்சியத்தில் (காமன் வெல்த்) பங்காளராக விருக்கக் கூடும்?

பிரிட்டிஷ் அரசாங்கத்தால் பெரும்பான்மையும் உண்டாக்கப்பட்டதும் அல்லது அதனால் உதவப்பட்டதுமான முதலாளிகளின் ஆதிக்க விஷயங்களே பலவாக விருக்கின்றன. இந்திய சமஸ்தான அரசர்களினதும், பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களினது பிரிட்டிஷ் முதலாளிகளது இந்திய முதலாளிகளினது பெரிய ஜமீன்தார்களதும் ஆன நன்மைகள் நம் முன்பு வைக்கப்படுகின்றன; அவர்கள் பாதுகாப்பிற்காகக் கூச்சலிடுகின்றனர். உண்மையில் பாதுகாப்பு வேண்டிய உதவியற்ற கோடிக்கணக்கானமக்கள் திக்கற்றவராக விருக்கின்றனர். பிரிட்டிஷ் சாம்ராச்சியம் இந்தியாவில் இருக்கும் வரையில் அது முதலாளிகளின் நலன்களைப் பலப்படுத்துவதோடு மேலும் அதிகப்படுத்தவும் கூடும். அவைகளில் ஒவ்வொன்றும் நமது வழியில் புதிய தடையாக ஏற்படும் அவையெத்தை முன்னிட்டு அரசாங்கம் அடக்குமுறையில் நிற்கவேண்டியிருக்கிறது வெறுக்கத்தக்க ஏஜண்டுகள், கலகம் புரிவோர், ஒற்றர்கள், அப்ரூவர்கள் என்பவர்களோடு இரகசியமாக தொடர்பு கொள்வதே அரசாங்கத்தின் அறிகுறி.

"நமக்குப் பூரண சுயேச்சையே வேண்டும்"

சுயேச்சையைப்பற்றியும் குடியேற்ற நாட்டுப் பதவியைப்பற்றியும் அபிப்பிராயப்பேதம் மிக உடையோம்; நாம் சச்சரவு கொண்டது சொற்களைப்பற்றியே ஆனால் உண்மையான காரியம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும். அதற்கு எப்பெயரிருந்தபோதிலும் சரியே இந்தியாவிற்குப் பொருத்தமாகும் வகையில் எவ்வமைப்புடைய குடியேற்ற நாட்டுப் பதவியும் நமக்கு உண்மை அதிகாரத்தை அளிக்குமென்று யான் நினைக்கவில்லை

இந்தியாவின் பூரண சுதந்திரத்திற்கு நாம் நிற்கின்றோம். இக்காங்கிரசு நமக்கு எவ்வகையிலும் அறவுறுத்த பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கு உரிமை உண்டென்பதையும் அங்கீகரிக்கவுமில்லை இனி அங்கீகரிக்கவும் மாட்டாது. அதனை நாம் எதுவும் கேட்கவில்லை. உலகத்தின் பார்லிமெண்டிலுக்கும்மனச்சான்றுக்கும் நாம் எந்த அன்னியர்ஆதிக்கத்திற்கும் இந்தியா இனி கீழ்படியாதென்பதை நாம் அறிவுறுத்துகின்றோம் நமது எண்ணத்தைப் பூர்த்திசெய்ய இன்று அல்லது நாளைநாம் பலமாகவிராதிருக்கக்கூடும். நமது பலவீனத்தை நாம் உணருகின்றோம்; நாம் தற்பெருமை கூறவில்லை நமது உறுதிப்பாட்டின் பொருளையோ அல்லது பலத்தையோ எவரும், இங்கிலாந்து நாடும், தவறாகவோ அல்லது குறைவாகவோ நினைக்கவேண்டாம். உண்மையில்என்ன விளைவு ஏற்படுமென்பதைப் பூரணமாக அறிந்தே நாம் அவ்வுறுதியை மேற்கொள்கின்றோம். நாம் பின் வாங்கமாட்டோம் நாட்டின் மனம் தெளிவாகவும் உறுதியுடனுமிருக்கும்போது அந்நாட்டை நீண்ட காலம் ஏமாற்ற முடியாது. இன்றும் நாளையும் நமக்கு சித்தியேற்படாவிட்டாலும், அதற்கு மறுநாள் சித்தியடைவது திண்ணம்

சமாதானத்திற்கும் நாட்டிற்கு இட்டமாக வேலைசெய்ய வசிக்கும் விழைகின்றோம். சச்சரவாலும் பசியாலும் களைத்துப்போயினும் வீட்டிலுள்ளோர்களைந்துபோவதும், நமது திறங்கொண்ட இளைஞர் சிறைக்குப்போவதும், தூக்கிலிடப்படுவதுமான காட்சியும் நமக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றனவா? தொழிலாளி வேலை நிறுத்தம் புரியவும் தனது சிறிது கூலியையும் இழந்து பட்டினிகிடக்க விரும்புகின்றனனா! வேறு வழியில்லை. அதனைக் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டியிருக்கிறது கௌரவமான சமாதானத்திற்கு வேறு வழியில்லாததனால், நம் தேசிய போராட்டமென்னும் இக்கண்ணிருந்த வழியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், நாம் சமாதானத்திற்காக விழைகின்றோம்; விரும்புவோருக்கு எப்பொழுதுமே தோழமைக் கை நீட்டப்பட்டிருக்கும். அக்கைக்குப் பின்னே அநீதிக்கு இடங்கொடாத உடலும் முக்கியமான எவ்விஷயத்திலும் இடங்கொடாத மனமும் இருக்கின்றது.

நமக்கு முன்னர் போராட்டமிருப்பதால், எதிர்கால அரசாங்க அமைப்பைத் தீர்மானிக்க வேண்டிய காலம் இன்னும் ஏற்படவில்லை. இரண்டு வருடங்கட்கு மேல், நாம் அரசாங்க அமைப்புகளை நிறுவினோம். முடிவாக சர்வ கட்சிக் கமிட்டி அம்முயற்சிகளைச் சித்திகரமாக முடித்து அதின் சொந்த திட்டத்தை நிறுவியது. அத்திட்டத்தை ஒரு வருடத்திற்கு இக்காங்கிரசு ஏற்றுக்கொண்டது. அத்திட்டத்தை வகுக்க எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி வீணாகவில்லை. அதனால் இந்தியாவிற்கு பலன் ஏற்பட்டது; ஆனால், அவ்வாண்டு கழிந்துவிட்டது. திட்டங்களை வகுக்கும்பகுதியைத் தவிர்த்து செயலை நாமும் புதிய சந்தர்ப்பங்களை நாம் நிர்வகிக்கவேண்டும். இருந்தபோதிலும் நம்மைப் பாதிப்பதும் நமது போராட்டத்தைத் தடைசெய்வதோ அல்லது உதவுவதோ ஆன விஷயங்களையும் [illegible]

விவசாயிகள்—தொழிலாளர்கள்

[illegible]

தொழிலாளர்கட்கு உதவி

[illegible]

விவசாயிகள் நிலை

[illegible] கட்டு அளிக்கப்பட்டு வருகின்றது. அப்பகுதிகளில் விவசாயிகள் பயிரிட்டு உயிர் வாழ்கின்றனர். [illegible] நாட்டின் பெரும் பகுதிகளில் விவசாயிகள் நிர்வாகம்செய்யும் இடமுள்ளது. அதனை நம்நாடெங்கும் பரப்பவேண்டும். அப்பணியில் நாம் குறைந்தது சிலபெரிய ஜமீன்தார்களின் ஒத்துழைப்பைப் பெறுவோமென்று நம்புகின்றேன்.

தொழில் காங்கிரசின் தொடர்பு

விவரமான பொருளாதாரத் திட்டத்தை நிறுவுவது ஆண்டுக் கூட்டத்தில் இக்காங்கிரசிற்கு கூடுமானதல்ல சிலபொது அடிப்படைகளைக் குறிப்பிட்டு இவ்விஷயத்தில் ஊக்கம் கொண்ட டிரேட் யூனியன் காங்கிரசு முதலிய இயக்கங்களின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்போடு விவரங்களைப் பூர்த்தி செய்ய அதை இந்திய காங்கிரசிற்கு அறிவுறுத்தலே இக்காங்கிரசால்முடியும். இக்காங்கிரசிற்கும் டிரேட் யூனியன் காங்கிரசிற்கும் ஒத்துழைப்பு வளர்ந்து இவ்விரு இயக்கங்களும் ஒத்துழையாக எதிர்கால போராட்டத்தில் போராடுமென்றும் யான் நம்புகின்றேன்.

நாம் அதிகாரத்தைப் பெறும் வரை இவை அனைத்தும் பத்திரமான எண்ணங்களாகும் அதிகாரத்தைவல்லமை கைப்பற்றுவதென்பதே உண்மை வேலை. ஆய்ந்து சிந்தனை செய்வதாலும் வாக்குவாதத்தாலும், அதிகாரம் கிடைக்காது நாட்டு மக்களின் உறுதிப்பாட்டை வற்புறுத்த நடவடிக்கைகளைப் பலமாக [illegible] வேண்டும். அது சம்பந்தமாகவே இக்காங்கிரசு கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த ஆண்டு நாம் ஆயத்தம் செய்தோம். காங்கிரஸ் இயக்கத்தைப் பலப்படுத்த ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. பலங்கள் கொஞ்சமல்ல; நமது இயக்கம் ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பிறகு சீர்குலைந்திருந்தது. இதுபோது சீர்பட்டு செம்மையான நிலைமையிலுள்ளது. நமது பலஹீனமும் மலிந்து வெளிப்படையாகக் காணப்படுகிறது. காங்கிரஸ் கமிட்டிகளுக்குள்ளும் சச்சரவு ஏற்பட்டுள்ளது; தோல்வியால் நமது பலமும் முயற்சியும் வீணாகின்றன, நமது பண்டை பலவீனத்தை விட்டு மேலெழ முடியாவிட்டால், நம்மால் எவ்வளவு பெரும்போராட இயக்கமுடியும்? பலமான நடவடிக்கையை மேற்கொள்வோமானால் நமது மனவுறுதி செவ்வியுறும்; இவ்விழிந்த சச்சரவை நாம் சகிக்கமாட்டோம்.

அமைதியான முறைகள்

அர்ச்சடவடிக்கை தானென்ன? நாம் [illegible] காரணம்நாம் [illegible] நமது சொந்த இயக்க அமைப்புத் திட்டத்தாலன்று, மற்று உண்மை [illegible]

(இதன்தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

சாக்கடையில் பிண மூட்டை

ஸ்திரீயின் பிரேதம் அழுகி விட்டது

மர்மம் வெளிப்படவில்லை

தஞ்சாவூர், டிசம்பர், 28

நேற்று ரேணி மைதானத்தையடுத்து புதிதாய்க் கட்டப்பட்டுள்ள சாக்கடையில் சாக்கு மூட்டையில் பிணமொன்றிருக்கக் காணப்பட்டதன் சம்பந்தமாக தஞ்சாவூர் முழுதும் மிகுந்த பரபரப்பேற்பட்டிருக்கின்றது. சாக்கு மூட்டையில் கட்டிப் போடப்பட்டிருந்த அப்பிணம் அழுகிப்போயிருந்ததாயும், அது சுமார் 35-வயதுள்ள ஸ்திரீயின் பிரேதமென்றும் தெரிகிறது. இன்னும் பிணத்தையாரும் அடையாளம்கண்டுபிடிக்க முடியவில்லை. அங்கு பிண மூட்டை இடப்பதன் மர்மமும் இன்னும் வெளிப்படவில்லை. போலீசார் பிணத்தைப் பரிசோதனைக்கு அனுப்பிப் புலன் விசாரித்துவருகின்றனர்.

விருதுநகரில் மூட்டை வண்டி விபத்து

இருவண்டிகள் கவிழ்ந்ததால் வழியடைப்பு

திருநெல்வேலி, டிசம், 29

நேற்றுமாலை விருதுநகரில் மூட்டை ரயில் தொடரின் 20-வது வண்டி கவிழ்ந்து அதிலிருந்த வண்டியும் தண்டவாளத்தை விட்டி தள்ளியதனால் வழியடைக்கப்பட்டு மதுரைக்கும் மணியாச்சிக்குமிடையே செல்லும் ரயில்வண்டிகள் சுமார் ஐந்து மணிநேரம் வரை தாமதப்படுத்தப்பட்டன. மதுரையிலிருந்து உதவிக்கு என்ஜின் வந்த பின்னர் தான் விழுந்த வண்டிகள் தூக்கப்பட்டு வழியடைப்பு விலக்கப்பட்டது. அ. பிரஸ்.

ஏஜண்டு தேவை

திருப்பத்தூருக்குத் தக்க டிபாசிட்டுடன் 1-1-30-லிருந்து பொறுப்பு வாய்ந்த ஓர் ஏஜெண்டு தேவை.

மானேஜிங் எடிட்டர்.

ஈரோடு

மூல ஏஜண்டாய் இருந்த திரு. அமீர் அலர்கனி சீக்கி செல்வராஜ் கம்பெனியாரை 24-12-29 முதல் ஈரோடு ஏஜண்டாய் நியமனம் செய்துள்ளோம். நண்பர்கள் இவர்களிடமே பத்திரிகை பணம் கொடுத்து வாங்கிக்கொள்ளக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

திராவிடன்

சென்னை 1929 டிசம்பர் 30

நாகர் கோவில் மகாநாடு

அகில திருவாங்கூர் சமுதாய சீர்திருத்த மகாநாடு, நாகர் கோவிலில் 27, 28 ஆம் தேதிகளில் ராவ் சாஹிப் எம். கே. ரெட்டியார் அவர்களின் தலைமையின் கீழ் சிறப்புடன் நடைபெற்றது. மகாநாட்டிற்கு கணக்கற்ற பிரதிநிதிகள் திருவாங்கூர் சமஸ்தானத்தில் எல்லாப் பகுதியிலிருந்தும் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்தும் வந்திருந்தனர். மகாநாட்டில் குறிப்பிடத் தக்கவை பெண்மக்கள் நிரம்ப வந்திருந்ததும், திருவனந்தபுரம் மனோகரமங்களம் என்ற இரு பெண்மணிகள் மிக இனிமையாய்ச் செந்தமிழ்ப் பாக்கள் பாடியதுமே. திருவாங்கூர் சமஸ்தானம் பார்ப்பனமயம்—கால் முதல் தலைவரை அக்கிரகாரம், பார்ப்பான் பூலோக தேவன் என்று கருதி அவனுக்குச் சாப்பாடு தட்டில்லாமல் வயிறு புடைக்கப் போடப்படும் இடம் அம்மட்டோ, முட்டாள் தனமான முறை ஜெபம் நடக்கும் இடம் என்று சொல்லவேண்டும். இத்தகைய பார்ப்பனக்கோட்டையில் பார்ப்பனீயத்தை ஒழிக்க ஒரு மகாநாடு கூட்டப்பட்டு, அது சிறப்பாக நடைபெற்றதென்றால், இங்குப் பார்ப்பனக் கொடுமைகள் எத்தனை இருக்கவேண்டும்? பார்ப்பனீயத்தின் மேல் மக்களுக்கு எவ்வளவு எரிச்சல் இருக்கவேண்டும்?

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பல வென்றாலும் அவைகளுள் சில முக்கியமானவற்றைப்பற்றி நாம் எடுத்துரைக்க விரும்புகின்றோம். முதல் வதாகக் கோயில் நுழைவுத் தீர்மானம், இக்கோயில் நுழைவுத் தீர்மானம் வெறும் ஏட்டித்தோடு போகாமல் இருக்கவேண்டிச், செய்கையில் கொண்டுவர ஒரு கமிட்டியும் நியமனம் செய்யப்பட்டது. இக்கமிட்டியார் கடமை அடுத்த ஆண்டிற்குள் எப்படியாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கோயில் நுழைவு உரிமை வாங்கிக் கொடுப்பதேயாகும். இரண்டாவது தீர்மானம் இதுதான் மிகக் கிளர்ச்சியை உண்டாக்கியது. இத்தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்ட போதுதான் சுயமரியாதை இயக்கத்திலும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலும் திருவாங்கூர் மக்களுக்கு இருக்கும் அழுத்தம் தெரிந்தது. இத்தீர்மானம் என்ன? சுயநலமும் சாதிவெறியும் பிடித்தப்பட்டர் என்று அழைக்கப்படும் பார்ப்பனர்கட்குத் தேவஸ்தான உத்தியோகமும் தேவஸ்தானக்கமிஷனர் உத்தியோகமும், மற்றும் பொறுப்புள்ள உத்தியோகங்களும் கொடுக்கப்படாது என்பதே. இதை நால்வர் எதிர்த்துப் பேசினர். ஆனாலும் இந்நால்வர் சுப்பிரமணிய தம்பிரான் புண்ணியமாய் ஒழிந்தது. ஏனெனில் மகாநாட்டிற்கு வந்திருந்த மக்கள் இவர்களைப் பேசவிடமறுத்தார்கள். இருந்தாலும் புன்னகையுடன் இடையிடையே இவர்களால் பேச முடிந்தது. என்ன பேசினாலும், பேசினோர் தவிர வேறு யாரும் இத்தீர்மானத்திற்கு எதிரிடையாய் கைதூக்க வில்லை. இதிலிருந்தே சமுதாய சீர்திருத்தத்திற்கு எதிரிடையாய் இருக்கும் பார்ப்பன உத்தியோகஸ்தர்கள்மேல் மக்களுக்கு எவ்வளவு கடுப்பு இருக்கின்றதென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ?

மூன்றாவதாக, நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பார்ப்பனர்களைத் தூக்கிவிட வேண்டும் என்பதைப் பற்றியதாகும். இப்பொழுது திருவாங்கூர் சமஸ்தானத்தில் பார்ப்பனர்கள் என்ன குற்றம் செய்தாலும் அவர்களைத் தூக்கிலிடமுடியாது; பார்ப்பனரல்லாதாரை மட்டுந்தான் தூக்கிலிடலாம். அவ்வக்கிரமத்தை எங்குசென்று முறையிடுவது? திருவாங்கூர் சமஸ்தானத்தார் நாகரீகமுடையவர்களானால் இவ்வக்கிரமத்தை உடனே ஒழிக்கவேண்டும், ஏன்? வெளிநாட்டில் இதைக் கேட்டால் சிரிப்பார்கள்.

நான்காவது தீர்மானம் ஏழைமக்கள், வரி செலுத்துவோர் பணத்திலிருந்து மதம், புண்ணியம் என்ற பெயரால் பார்ப்பனச் சோம்பேறிகட்குச் சமைத்துப் போடப்படும் கொடுமையையொழிக்கவேண்டும் என்பதேயாகும். இது ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டதிலிருந்து, திருவாங்கூர் மக்கள் பார்ப்பனச் சோம்பேறி மார்களுக்குச் சாப்பாடு போடுவதை எவ்வளவு வெறுக்கின்றார்கள் என்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறது.

இனிச் சாதி வித்தியாசங்கள் ஒழிய வேண்டும். கலப்பு மணங்கள் ஏற்படல் வேண்டும், சமபந்திபோசனம் நிகழவேண்டும், சமஸ்தானம் முழுதும் கட்டாயக் கல்வி கொடுத்தல் வேண்டும், விதவா மறுமணங்கள் நிகழவேண்டும் என்பன பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்களைப்பற்றி மலையாளத்திலும் தமிழிலும் பேசினோர் மிக வீரத்துடன் பேசினர். இச்சமுதாய சீர்திருத்த மகாநாடு திருவாங்கூர் சமஸ்தானத்தையே ஒரு கலக்கு கலக்கி விட்டதென்றே சொல்லவேண்டும். இம்மகாநாட்டால் திருவாங்கூரில் புது எழுச்சியும் உண்டாய்விட்டது. இம்மகாநாட்டைச் சிறப்புடன் நடத்திய வரவேற்புக்கழக அங்கத்தினருக்கு எம்நெஞ்சார்ந்த வந்தனம் செலுத்துகின்றோம்.

காங்கிரஸ் தலைவர் பேருரை

"தூபவனுக்குப் பல நாள் வேலை; தடிக்காரனுக்கு ஒரு நாள் வேலை" என்ற பழமொழி, காங்கிரஸ் தலைவர் பேருரையைப் படித்ததும் நமது ஞாபகத்துக்கு வந்தது. பண்டித ஜவஹரிலால் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் காங்கிரசுக்குச் சாவுமணி அடித்துவிட்டதாகப் பலர் சந்தேகம் கொண்டது இப்பொழுது உண்மையாகிவிட்டது. பூரணசுயேச்சை சட்டசபை பகிஷ்காரம், கோர்ட்டு பகிஷ்காரம்; பள்ளி பகிஷ்காரம் முதலியவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றி நாட்டைக் குடிகெடுக்கும் சூழ்ச்சிகளேயன்றி வேறல்ல. வெகு ஆடம்பரத்துடன் திரு. காந்தியால் ஆரம்பம் செய்யப்பட்ட ஒத்துழையாமை இயக்கம், மாணவகெட்ட விதமாய் அழிந்தொழிந்ததை திரு காந்தியே ஒப்புக்கொண்டுமிருக்கிறார். சட்ட மறுப்புக்கும் வரி மறுப்புக்கும் நடு தயாரில்லை யென்று திரு. காந்தி லாகூர் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் தெரிவித்திருக்கிறார். எனினும் ஒத்துழையாமையைப் புதுப்பிக்க, பொறுப்பற்ற காங்கிரஸ் தலைவர் யோசனை கூறுகிறார்.

கல்கத்தா காங்கிரஸ் தீர்மானப்படி, 1929 டிசம்பர் 31-ந்தேதிக்குள் குடியேற்ற நாட்டுப் பொறுப்பாட்சி வழங்கவோ, வழங்குவதாக வாக்குறுதி யளிக்கவோ பிரிட்டிஷ் சர்க்கார் முன் வராததினால் கல்கத்தா தீர்மானப்படி லாகூர் காங்கிரஸில் ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேறித்தானே வேண்டுமென்று காங்கிரஸ் வாதிகள் கூறுகிறார்கள். ஆனால், கல்கத்தா காங்கிரஸ் தீர்மானத்தை இந்திய மக்கள் ஆதரிக்கவில்லை யென்பதையும் தற்கால காங்கிரஸ் சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனம் அல்லவென்பதையும் அந்த காங்கிரஸ் வாதிகள் மறந்துவிட்டது என்காரணம் பற்றியோ தெரியவில்லை. சீக்கியர்களும், முஸ்லீம்களில் பெரும்பாலரும், லிபரல்களும், தென்னாட்டில் பார்ப்பனரல்லாதாரும், இந்தியக் குடி மக்களில் ஆறிலொரு பகுதியான "தீண்டாதார்" என்போரும் காங்கிரசை விட்டு விலகி நிற்கையில், காங்கிரஸ் இந்திய மக்களின் பொது ஸ்தாபனமென்று கூறுவது பெருத்த மோசடியல்லவா? அவசர புத்தியுடைய சிலர் சேர்ந்து கல்கத்தாவில் செய்த முட்டாள்தனமான தீர்மானத்தை யாராவது மதிப்பார்களா? இந்திய முன்னேற்றத்தில் விருப்பமும் இந்திய மக்களிடத்தில் அன்பும் உடைய லார்டு இர்வின் பெரு முயற்சியினால் வட்டமேஜை மகாநாடு கூட்டுவிக்க பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டிருக்கையில், அந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, ஒத்துழையாமையைப் புதுப்பிக்க லாகூர் காங்கிரஸ் முடிவு செய்திருப்பது பைத்தியக்காரச் செயல்மட்டு மன்றி பேராபத்து விளைக்கத்தக்கதுமாகும். ஸ்ரீமதி சரோஜனி தேவி சொல்வது போல், வட்டமேஜை மகாநாட்டில் நமது கோரிக்கைகளையெல்லாம் தெரிவித்து, நமக்கு அனுகூலமான முடிவு ஏற்படாவிட்டால், மேல் செய்ய வேண்டிய காரியங்களை யோசித்தல் குடி முழுகிப்போகுமா? பூரணசுயேச்சைத் தீர்மானத்தை கல்கத்தா காங்கிரசிலேயே நிறைவேற்றிவிட வேண்டுமென்று சில பொறுப்பற்ற தலைவர்கள் அவசரப்பட்டார்கள். திரு. காந்தி முயற்சியினால் லாகூர் காங்கிரஸ் வரை அந்தத் தீர்மானம் ஒத்தி வைக்கப்பட்டது. இந்த ஒரு வருஷத்தில் ஒன்றும் முழுகிப்போய் விடவில்லை. லாகூர் காங்கிரசுக்கு முன் செய்யவேண்டியதாக நிர்ணயம் செய்யப்பட்ட பூர்வாங்க வேலைகளைக் கூட இந்த இடைக்காலத்தில் காங்கிரஸ் செய்து முடிக்கவில்லை. எனவே, வட்டமேஜை மகாநாடு கூடி முடிவடையும் வரை காங்கிரஸ் ஏன் காத்திருக்கக்கூடாது? எவ்வவோ எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல், இந்தியாவுக்கு நன்மை செய்ய முன் வந்திருக்கும் இந்திய மந்திரிகளும் லார்டு இர்வினுக்கும் நாம் பக்கபலமாயிருந்து உதவி செய்வதற்குப் பதிலாக, அவர்கள் நிலைமையை கொஞ்சமும் கூட சிக்கலாக்குவது பெரியதேசத் துரோகமாகும்.

காங்கிரஸ் இந்திய மக்களுக்கெல்லாம் பொது ஸ்தாபனம் என்று காங்கிரஸ்காரர் எவ்வளவுதான் பொக்கம் பேசினாலும் சரி—அது கேவலம் ஒருவம்பர் மகாசபை என்பது இந்த வாரமுடிவுக்குள் வெட்ட வெளிச்சமாகிவிடும். ஒரு சில அவசரபுத்தியுடைய இளைஞர்களைத் தவிர, பகுத்தறிவும் உலக அநுபவமும் உடைய எவரும் காங்கிரஸ் தீர்மானங்களை லட்சியம்செய்யமாட்டார்கள். காங்கிரசுக்குள்ளேயே இரண்டோ மூன்றோ கட்சிகள் தோன்றப் போவதும் உறுதி. சென்னையில் கூடிய லிபரல் மகாநாட்டாரும் காங்கிரஸ் தீர்மானங்களை எதிர்க்கத் தொடங்கிவிட்டார்கள்

இந்த நிலைமையில் தேச மக்கள் கடமையென்ன? வம்பர்களின் பகட்டு வார்த்தைகளுக்கு தேச மகா ஜனங்கள் செவிசாய்க்கக்கூடாது. நிதானபுத்தியற்றவர்கள் கூறுபவைகளைக் குருட்டுத்தனமாகக் பின் பற்றினால் பிற்காலத்தில் பேராபத்து விளையுமென்பது திண்ணம். திரு காந்தியின் வார்த்தைகளை நம்பி பள்ளிகளை பகிஷ்காரம் செய்து கதியற்றவர்களாய்த் தவிக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களை நாம் பிரதிதினமும் காண்கிறோம். திரு காந்தி வார்த்தைகளை நம்பி வக்கீல் தொழிலை விட்டு, குடும்பத்தைக் காப்பாற்ற வழியற்ற ஆண்டிகளாய் அலைந்துதிரும் எத்தனையோ வக்கீல்களையும் நாம் நேரிற் பார்க்கிறோம். திரு. காந்தி, திரு. ராஜகோபாலாச்சாரி போன்ற பெரிய தலைவர்கள் பாடு குசால்தான். குட்டித் தலைவர்களுடையவும் தொண்டர்களுடையவும் கதியென்னவென்பதை மகாஜனங்கள் கவனிக்கவேண்டும் காங்கிரஸ் அபிமானிகளான பெயர்பெற்ற வக்கீல்கள் எத்தனையோ பேர் இருந்தும் நமது தொழிலாளர் தலைவர்களுக்காகப் பேச எவராவது முன் வந்தார்களா? திருச்சிக் கேசில் சிறைபுகுந்த தலைவர்கள் வழக்குக்காக எந்த காங்கிரஸ் தலைவராவது உதவிசெய்ய முன்வந்ததுண்டா? எனவே வாய்வீரம் பேசும் ஏமாற்றுக்காரர்களான காங்கிரஸ் தலைவர்களின் நயவஞ்சகப் பேச்சுகளையும், அர்த்த மற்ற காங்கிரஸ் தீர்மானங்களையும் பொது மக்கள் நம்பிவிடலாகாதென்று இப்பொழுதே எச்சரிக்கிறோம்.

ராஜீயக் கைதிகளுக்கு மன்னிப்பு

சர் ஜேம்ஸ் கிரீரரின் குறும்பு

வைசிராயுக்கும் இந்தியமந்திரிக்கும் அபிப்பிராய பேதம்

கல்கத்தா, டிசம்பர், 28

கல்கத்தாவில் வெளியாகும் "லிபர்டி" பத்திரிகையின் லண்டன் நிருபர் அடியிற் கண்ட தந்திச்செய்தியனுப்பியிருப்பதாய்த் தெரிகின்றது:—ராஜீயக்கைதிகளுக்குப் பொதுவாக மன்னிப்பளித்து விடுதலை செய்யும் விஷயமாக வைசிராய் லார்டு இர்வினுக்கும், இந்தியா மந்திரி திரு. வெட்ஜ்வுட்பென் அவர்களுக்கும் அபிப்பிராய பேதமேற்பட்டிருப்பதாய்த் தெரிகின்றது. இந்தியா அரசாங்கத்தின் ஹோம் மெம்பரான சர் ஜேம்ஸ் கிரீரர் லார்டு இர்வினின் ஏற்பாடுகளில் தலையிட்டுக் குறும்பு செய்துவருவதாயும், அவர்முயற்சியினால் சர் கிரீரர் ஒரு முன்போலிருந்து வருவதாயும் சம்பப்படுகின்றது.

தற்போது இந்தியா மந்திரி திரு. வெட்ஜ்வுட் பென் இந்திய ராஜீயக் கைதிகளுக்கு மன்னிப்பளிக்கும் விஷயத்தை வைசிராய் லார்டு இர்வின் அவர்களே முடிவுசெய்துகொள்ளட்டுமென விட்டுவிட்டதாயும், எனினும் திரு வெட்ஜ்வுட் பென் வட்டமேஜை மகாநாட்டைக் குறித்தமட்டில் திரு. காந்தியும், பண்டித மோதிலால் நேருவும் அதில் கலந்து கொண்டால் தான் அம்மகாநாடு வெற்றியடையக் கூடுமென்பதை வைசிராயுக்கு நினைப்பூட்டியிருப்பதாயும் தெரிகின்றது. இதன் சம்பந்தமாக இந்தியமந்திரி திருவெட்ஜ்வுட்பென்னுக்கும் சிறிது சங்கடமான நிலைமை ஏற்பட்டிருப்பதாயும் தெரிகின்றது ஏனெனில் கன்சர்வேடிவ் கட்சியார் வட்ட மேஜை மகாநாடு கூட்டியாலோசிக்கப்படுவதை நேர் முகமாயும் வெளிப்படையாயும் தாக்குவதை விட்டு அம்மகாநாடு எவ்வளவு விரிவான பிரதிநிதித்துவமுடையதயிருக்கக் கூடுமோ அவ்வளவுக்கு விரிவானதாக விருக்க வேண்டுமெனக் கோரி அம்மகாநாடு கூட்டும் ஆலோசனையில் தடைமுறைகளைச் செய்யா உத்தேசித்திருப்பதாய்த் தெரிகின்றது. இதன் சம்பந்தமாக திரு வெட்வுஜட்பென் வாக்களித்திருப்பது ஒரு அடி பின்னேக்கிச் செல்வது போன்றிருக்கின்றது. லாகூர் காங்கிரஸ் ஒற்றுமையாய் நின்று போராடுவதன் மூலமாகத்தான் தொழிற்கட்சி அரசாங்கத்திற்கு இந்தியாவினிடம் நல்லெண்ணமிருக்கின்றதா இல்லையாவென்பதை சோதித்தவிடக்கூடும்.

சந்தேகத்துக்கிடமான மரணம்

எலிக்கடியால் மரணமேற்படுமா?

சென்னை, டிசம்பர், 29

அடையாற்றை யடுத்த கோட்டூர் கிராமத்தில் வசிக்கும் வள்ளியம்மாள் என்னும் ஸ்திரீ சென்ற வெள்ளிக்கிழமையன்று இரவு நிடுவென்று கூச்சலிட்டதுகேட்டு வீட்டிலிருந்தவர்கள் எழுந்து பார்க்கையில் அவள் கால்விரலில் சிறிது காயம்பட்டு இரத்தம் வடியக்கண்டதாயும், அவர்கள் அது எலிக்கடியாயிருக்கக் கூடுமெனக்கருதிப் பச்சிலைவைத்தியம்செய்ததாயும், ஆனால் அவள் மறுநாட் காலை இறந்துபோனதாயும் தெரிகிறது. அப்பெண் அன்றிரவு பல தடவைகளில் வாந்தி எடுத்ததாயும், மைலாப்பூர் சாவடி போலீசார் அந்த ஸ்திரீயின் மரணத்தில் சந்தேகித்து, பிரேத பரிசோதனைக்குப் பிணத்தைச் சென்னைக்கு அனுப்பியதன் மேல் அந்த ஸ்திரீயின் குடல் இரைப்பை முதலியவற்றை கெமிகல் எக்ஸாமினரின் சோதனைக்கனுப்பப்பட்டிருப்பதாயும் தெரிகிறது

சர்க்கஸில் குழப்பம்

வெள்ளைச் சிப்பாயின் வெறியால் வந்த வினை

நாற்காலியடிபட்ட இந்திய சிப்பாய் மரணம்

ஜபல்பூர், டிசம்பர், 28

கிறிஸ்துமஸ் பண்டிகை யன்றிரவு இவ்வூரில் வேடிக்கை காட்டிவரும் பரசுராமரால் சர்க்கஸில் ஒரு வெள்ளைச் சிப்பாய் குடிவெறியால் தலை கால் தெரியாமல் அங்கு மிகவும் அமர்ந்த கோஷாப் பெண்களிருந்த இடத்தில் நுழைந்தான் ஏற்பட்ட பெருங் குழப்பத்தின் பயனாய் இந்திய சிப்பாய் ஒருவன் இரும்பு நாற்காலியினால் அடிபட்டு காயமடைந்திறந்தான் கிறிஸ்துமஸ் பண்டிகையன்றிரவு சர்க்கஸுக்குச் சென்ற வேல்ஸ் இளவரசர் வாலண்டியர் படையைச் சேர்ந்த வெள்ளைச் சிப்பாய்களில் ஒருவன் மற்றவர்களைவிட அதிகமாய்க் குடித்துவிட்டு தாறுமாறாய்நடந்துகொண்டான். சர்க்கஸில் யானைகள் முதலியமிருகங்களைக் கொண்டு பல வேடிக்கைகள் காட்டிக் கொண்டிருக்கும் போது அவன் தன் இடத்தை விட்டெழுந்து சர்க்கஸ் மிருகங்கள் வேடிக்கை செய்யுமிடத்திற்குச் சென்று மிருகங்களை யணுகும்போது இதனால் ஆபத்து நேரிடக்கூடுமெனப் பயந்த சர்க்கஸ்காரர்கள் அவனைத்தடுத்து அப்—றல் கொண்டுபோய்விட்டனர். எனினும் அவ்வெறியன் தன்இடத்திற்குவாமல் தட்டுத் தடுமாறிக்கொண்டு கோஷா பெண்கள் உட்கார்ந்திருந்த பகுதிக்குள் நுழைந்துவிட்டதால் அவ்விருந்த ஸ்திரீகள் பயத்தால் அலறிக்கொண்டு பல திசைகளிலும் ஓடினார்கள். இதற்குள் சர்க்கஸில் வேடிக்கை பார்க்க வந்தவர்கள் பெரும்பாலோர் அங்கு ஓடிவந்தனர். ஆயினும் மற்ற வெள்ளைச்சிப்பாய்கள் தம்நண்பனை ஓடிப்பிடித்து அவனை சர்க்கஸ் கூடாரத்தை விட்டு வெளியேகொண்டுபோக முயன்ற போது வெளியே பல இந்துக்கள் கோபாவேசத்துடன் சர்க்கஸ் முனைக் கம்புகளுடனும் தடிகளுடனும் அவர்களுக்காகத் தயாராய்க் காத்திருந்தனர். இதற்குள் மற்றொரு இந்தியர் தடித்த மூங்கிற்கம்பால் ஒரு வெள்ளைச் சிப்பாயை அடிக்கமுயன்றபோது அந்த அடியைத் தடுக்கும்பொருட்டு மற்றொருவர் அருகிலிருந்த இரும்பு நாற்காலியைத் தூக்கி அவன் தலையி லடித்ததாயும், அதனால் அந்த இந்தியச் சிப்பாய் பலத்த காயமடைந்து பூமியில் சாய்ந்துவிட்டதாயும் சொல்லப்படுகின்றது. இதற்குள் ரஸ்தாவில் வெள்ளைச் சிப்பாய்கள் ஒருபக்கமாயும், இந்தியர்கள் ஒருபக்கமாயும் நின்று சண்டைக்குத் தயாராயிருப்பதைக் கண்டு சிலர் மத்தியஸ்தம் செய்து அக்கலகத்தைத் தவிர்த்ததாயும், காயமடைந்த இந்திய சிப்பாயை ராணுவ ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு அவன் இறந்துவிட்டதாயும், வெள்ளைச் சிப்பாய்களின் விபரீதச் செயலைக் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தப்போவதாயும் தெரிகிறது.

வட ஆற்காடு ஜில்லா கூட்டுறவு மகாநாடு

திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் தலைமை வகிப்பார்

வாணியம்பாடி, டிச, 30

வட ஆற்காடு ஜில்லா 11-வது கூட்டுறவு மகாநாடு ஜனவரி மாதம் 4, 5ந் தேதிகளில் வாணியம்பாடி இஸ்லாமியா கலாசாலைக் கட்டடத்தில் இந்தியா சட்ட சபைமெம்பர் திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். மகாநாட்டில் கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சிசாலைகள் திறப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது மகாநாட்டை அமிலிருந்தி இலாகா மந்திரி கனம் எஸ். ஆர். சேதுரத்தினம் ஐயரும், பொருட்காட்சியை சுகாதார மந்திரி கனம் என். முத்தையப்ப முதலியாரும் திறந்துவைப்பார்கள்.

மகாநாட்டு நிகழ்ச்சி முறை; சனிக்கிழமை காலை 8-30 முதல் 11-வரை ஊர்வலம். வரவேற்புக் கழகத்தலைவர் திரு. டி. சரியக்கவுண்டர் பேருரை, மகாநாட்டுத் திறப்புவிழா, மகாநாட்டுத்தலைவர் சொற்பொழிவு.

மாலை 1-முதல் 3-மணிவரை விஷயாலோசனைக் கமிட்டி கூட்டம்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9-முதல் 11.மணி வரை மகாநாட்டுத் தீர்மானங்கள்.

மாலை 2-முதல் 4-30 வரை தலைவர் முடிவுரையும் வந்தனோபசாரமும் நடைபெறுமென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.